சுருக்கம்

நிர்வாகம் – செய்தி மக்கள் தொடர்புத் துறை – பத்திரிகையாளர் ஓய்வூதியம் – பத்திரிகைத் துறையிலிருந்து ஓய்வு பெற்று நலிந்த நிலையிலுள்ள திரு. எம். சுப்ரமணியன், உதவி ஆசிரியர், தினமணி நாளிதழ், கோயம்புத்தூர் மாவட்டம் அவர்களுக்கு மாத ஓய்வூதியம் ரூ.8,000/– வழங்க ஆணை– வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நிர்வாகம்–4)த் துறை

அரசாணை (நிலை) எண்.108 நாள் 21.06.2017

திருவள்ளுவர் ஆண்டு 2048

ஹேவிளம்பி வருடம் ஆனி மாதம் 7 ம் நாள்

படிக்கப்பட்டவை:

1. அரசு ஆணை (நிலை) எண்.2, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நிர்வாகம்–4)த் துறை, நாள் 11.01.2016.
2. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ந.க எண் 293/செமதொ/ 2014, நாள் 24.7.2015.
3. பத்திரிகையாளர் ஓய்வூதியம், பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் மற்றும் குடும்ப நிதி உதவி பரிந்துரைக்குழு கூட்ட குறிப்புகள் நாள் 02.03.2017.

•••••

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாட்டில் உள்ள ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ.7,500/–லிருந்து ரூ.8,000/– ஆக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

2) மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், திரு. எம்.சுப்ரமணியன், உதவி ஆசிரியர், தினமணி நாளிதழ், கோயம்புத்தூர் மாவட்டம் என்பவர் பத்திரிகையாளர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெற நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகள் அனைத்தையும் பூர்த்தி செய்துள்ளார் எனவும், மேலும் அன்னாரின் சான்றிதழ்கள் அனைத்தும் ஆய்வு செய்யப்பட்டன என்றும் தெரிவித்து, திரு.எம்.சுப்ரமணியன், அவர்களுக்கு பத்திரிகையாளர் ஓய்வூதியம் வழங்கலாம் என பரிந்துரை செய்துள்ளார்.

3) மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட பரிந்துரைக்குழு கூட்ட குறிப்பில், பத்திரிகையாளர் ஓய்வூதியம், பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் மற்றும் குடும்ப நிதி உதவி பரிந்துரை குழுவானது 02.03.2017 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் ஓய்வூதிய பரிசீலனைக் குழு கூட்டத்தில் திரு. எம்.சுப்ரமணியன், உதவி ஆசிரியர், தினமணி நாளிதழ், கோயம்புத்தூர் மாவட்டம் அவர்களுக்கு பத்திரிகையாளர் ஓய்வூதியம் வழங்கலாம் என பரிந்துரை செய்துள்ளது.

4) அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், மேலே 2 மற்றும் 3ல் படிக்கப்பட்ட கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிக்கை மற்றும் பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதிய மற்றும் குடும்ப நிதி உதவி பரிசீலனைக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் பத்திரிகைத் துறையிலிருந்து ஓய்வு பெற்று நலிந்த நிலையிலுள்ள பத்திரிகையாளர் திரு. எம்.சுப்ரமணியன், உதவி ஆசிரியர், தினமணி நாளிதழ், கோயம்புத்தூர் மாவட்டம் அவர்களுக்கு பத்திரிகையாளர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மாத ஓய்வூதியமாக ரூ.8,000/–த்தை (ரூபாய் எட்டாயிரம் மட்டும்) இவ்வரசாணை வெளியிடப்படும் நாள் முதற்கொண்டு வழங்க அரசு ஆணையிடுகிறது.

கு.பி.பா..

5) மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படுவதுடன், செலவினத்தை 2017–2018 நிதியாண்டிற்கான வரவு–செலவு நிதியொதுக்கத்திலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

"2235. சமூகப் பாதுகாப்பும் நலனும்–60. ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் – 102. சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் –I திட்டத்தில் சேராதது – AH. தமிழ்நாட்டிலுள்ள பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதிய சலுகை வழங்கும் திட்டம்–27. ஓய்வூதியங்கள்–05 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள்"

(கு.தொகு.2235 60 102 AH 2750)

6) மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ.8,000/–த்தை (ரூபாய் எட்டாயிரம் மட்டும்) திரு. எம்.சுப்ரமணியன் அவர்களுக்கு பெற்றுத் தர சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலருக்கு அதிகாரம் அளிக்கும்படி மாநிலக் கணக்காய்வுத் தலைவர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7) ஓய்வூதியம் பெறும் பத்திரிகையாளரின் நிதி நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டாலோ அல்லது இயற்கை எய்தினாலோ, அது குறித்த முழுமையான அறிக்கையினை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை அவர்களுக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8) மேலும், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர், சென்னை–9 அவர்களால் மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட ஓய்வூதியம் குறித்த விவரங்களை உரிய முறையில் பராமரிக்க அறிவுறுத்தப்படுகிறது.

9) இவ்வாணை வெளியிடுவதற்கு அரசாணை (நிலை) எண்.519, நிதி (சம்பளங்கள்)த் துறை, நாள் 29.09.1997–ன்படி நிதித்துறையின் இசைவு பெற வேண்டியதில்லை .

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா.வெங்கடேசன்,
அரசு செயலாளர் (மு.கூ.பொ.)

பெறுநர்
திரு. எம்.சுப்ரமணியன்,
எண்.36178/8, Balaji Residency G002,
Balaji Nagar, Near KR Hospital,Uttarahalli,Bangalore-61,
மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர் மாவட்டம்.
ஆணையாளர், கருவூல கணக்குகள் துறை, சென்னை–15.
மாநில கணக்காயர், கணக்குகள் (ம) பணிவரவு, சென்னை–18.
மாவட்ட கருவூல அலுவலர், கோயம்புத்தூர் மாவட்டம்.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், ஈ.வி.கே.சம்பத் மாளிகை, சென்னை–6.
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நகல்
நிதி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி)த் துறை, சென்னை–9.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (வரவு–செலவு)த் துறை,சென்னை–9.
செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை,சென்னை–9.
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கோயம்புத்தூர் மாவட்டம்.
இ.கோ/உபரி நகல்கள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
23/6/17